தூத்துக்குடி தொகுதியில்

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சன் டிவி நிதி உதவி!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் மகிழ்ச்சி!



தூத்துக்குடி. அக். 4-

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி தனது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

எனது தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி, விளாத்திகுளம் பகுதிகளில் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு முக்கிய காரணங்களாக மிக இளம் வயதில் பெண்களுக்குத் திருமணம் நடைபெறுவது உள்ளிட்ட பல காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சன் டிவி நிறுவனத்தை அணுகினோம்.

அதன் தொடர்ச்சியாக, முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவாக சன் டிவி சார்பில் வழங்கப்படும் சமூக மேம்பாட்டு நிதியிலிருந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கவும், குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் ரூ.3.66 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.இதற்கான காசோலையை சன் டிவி சார்பாக திருமிகு. காவேரி கலாநிதி மாறன் அவர்கள்.

தொண்டு அமைப்பிற்கு வழங்கிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். குழந்தைகளின் நலனுக்காக முன்னெடுக்கப்படும் இப்பணிகள் அப்பகுதிகளில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் திருமிகு. செல்வி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுராந்தகம், தாராபுரம் த.வெ.க. வேட்பாளர்கள்

மக்களால் விரட்டி அடிப்பு! நீங்கள் தான் தீயசக்தி புரியவில்லையா CM sir?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கடும் தாக்கு!

நெல்லை.அக்.4-.

மதுராந்தகம், தாராபுரம் த.வெ.க. வேட்பாளர்கள் மக்களால் விரட்டி யடிக்கப் படுவதிலிருந்து நீங்கள் தான் தீயசக்தி என்பது புரியவில்லையா சிஎம் சார்? என சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.



காங்கிரஸ் ஆதரவை வாங்கிக் கொண்டு பா.ஜ.க.வுடன் கள்ள உறவு, விடுதலைச் சிறுத்தைகளின் துணையைப் பெற்றுக் கொண்டு பா.ம.க.வுடன் கள்ள உறவு, ஐ.யூ.எம்.எல்.ஐ. பயன்படுத்திக் கொண்டு பக்ரீத்துக்கு மாடு வெட்டதடை, இடதுசாரிகளின் உதவி வாங்கிக் கொண்டு தொழிலாளர் விரோத நடவடிக்கை யில் ஈடுபடுவதெல்லாம் கள்ளக் கூட்டணி இல்லையா? CMsir?

தொகுதி மறு சீரமைப்பு வேண்டாம் என்று தோழமைக் கட்சி தலைவர்களை அழைத்துப் பேசி தீர்மானம் நிறைவேற்றி விட்டு அமித்ஷாவை சந்தித்து தொகுதி மறு சீரமைப்புக்கு ஒப்புதல் அளித்த தன் மூலம் பா.ஜ.க.வின் கிளை ஆட்சி தான் நடத்துகிறோம் என்பதை உறுதி செய்து விட்டீர்களே CMsir?

பெண்களுக்கு 1000 ம் ரூபாய் உரிமை தொகை, மகளிர் விடியல் பயணம், கல்லூரி மாணவ,மாணவியர்களுக்கு உதவித்தொகை, நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி மருத்துவம்,குறைந்த கட்டணத்தில் தடையற்ற மின்சாரம், காலை உணவுத் திட்டம் என்று எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களைத் தந்த தி.மு.க. உங்களுக்கு தீய சக்தியா CM sir?

தொடர் மின்வெட்டு, மின் கட்டணம் உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர் குலைவு, பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு,போதைப்பொருள் நடமாட்டம் அதிகரிப்பு, குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை பராமரிப்பு தனியாருக்கு தாரை வார்ப்பு,பேருந்து ஓட்டுநர்,நடத்துனர் பணிக்கு ஆள் சேர்க்க உத்தரப்பிரதேச நிறுவனத்திற்கு டெண்டர், விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் திட்டங்கள், தமிழக கனிம வளங்கள் ஆந்திர ரெட்டி கேங்கிடம் ஒப்படைப்பு, காவிரி டெல்டாவை வறண்ட பூமியாக மாற்றியது போன்ற மக்கள் விரோதங்களை அடுக்கடுக்காய் செய்து தமிழகத்தை சீரழிக்கும் நீங்கள் தூய சக்தியா CM sir?

மதுராந்தகம், தாராபுரம் த.வெ.க. வேட்பாளர்கள் மக்களால் விரட்டியடிக்கப் படுவதிலிருந்து நீங்கள் தான் தீயசக்தி என்பது புரியவில்லையா CM sir?

மக்கள் விழித்துக் கொண்டு விட்டனர். உங்கள் ஆட்சிக்கான Countdown தொடங்கி விட்டது. மக்கள் உண்மையான மாற்றத்திற்கு தயாராகிவிட்டார்கள் CM sir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின்

ஒட்டுமொத்த தீய சக்தியாய் விளங்குகிறார் விஜய்!

முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் கண்டனம்!

நாகர்கோவில், அக். 4-

"தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த தீயசக்தியாக விளங்குகிறார் முதல்வர் விஜய்" என்று முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நிதி இல்லை, நீதி இல்லை, நாதி இல்லை என்று கூவிய நீங்கள் இன்று நிலையில்லா மனிதனாக மக்களை ஏமாற்றி தமிழ்நாட்டை வழிநடத்துவதை பார்க்கும் போது தமிழ்நாடு அதள பாதாளத்திற்கு செல்லும் என்பதற்கு இந்த நான்கு மாத ஆட்சியே சாட்சியாய் நிற்கிறது.

தினம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறுமிகள் பாலியல் வன் கொடுமை என்று எத்தனை நடந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாத முதல்வர் கிடைத்ததை எண்ணி மக்கள் புலம்புவது உங்கள் காதில் கேட்பதாக இல்லை என்பதை உங்கள் செயல் பாடுகள் மூலமாக தினம் நாங்கள் அறிந்துக் கொள்கிறோம். நீதி இல்லை என்று கூப்பாடு போட்ட நீங்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உள்ளிட்டோர் முதலமைச்சராக பணியாற்றிய அறையை மாற்றி அமைக்கும் வகையில் 5வது மாடியில் முதலமைச்சர் அறையை மாற்று ஏற்பாடு செய்து தேவையில்லாத நிதி சுமை ஏற்படுத்தியதை அனைவரும் அறிவோம்.



இதற்கிடையில் புதிதாக தலைமைச் செயலகம் அமைக்கப்படும் என்று அறிவித்துவிட்டு, அதற்கான பணிகளும் தொடங்கப்படும் என்று அறிவித்துள்ள உங்களிடம் சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன் ?

புதிதாக அமைக்கப்படும் தலைமைச் செயலகம் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுவது உங்களுக்கு நிதி சுமையாக தெரியவில்லையா?

அப்படி அமைப்பது அதுவும் மீனவ மக்களின் அடிப்படை ஆதாரமாக இருக்கக் கூடிய பட்டினப் பாக்கம் தான் வேண்டுமா?

ஏன் நீங்கள் நிதி சுமையை குறைக்க முத் தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புதிய தலைமை செயலகமாக உருவாக்கப் பட்ட ஓமந்தூரார் மாளிகையை (தற்போது பன்னோக்கு மருத்துவமனை) ஏன் சில கோடிகளில் புனரமைத்து புதிய தலைமைச் செயலகமாக பயன்படுத்த கூடாது?

இந்த கட்டிடம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதி அருகிலேயே அமைந்திருப் பதால் சட்டமன்றத் கூட்டத்தொடர்களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் நேரத்தில் கலந்துக்கொள்ளவும், தேவையில்லாத போக்குவரத்து சிரமம் மற்றும் எரிபொருள் வீணாவதையும் தடுக்கும் நிலையை உருவாக்கலாம் அல்லவா ?

இந்த தலைமை செயலகம் 13.03.2010 அன்று திறக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் 2010 - 2011 ஆண்டுக்கான பட்ஜெட் மார்ச் 19, 2010 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அதற்கான கூட்டத்தொடர் முழுவதும் இந்த ஓமந்தூரார் மாளிகையில் தான் நடைபெற்றதை வரலாறு பதிவு செய்துள்ளதை இங்கு யாரும் மறுக்க முடியாது.

இதையும் மீறி நிதியை விரயம் செய்வதும், மக்களின் வாழ்வாதாரங்களை சீர்குலைக்கும் வகையிலும் நீங்கள் மேற்கொள்வது உங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யும் செயலாக தெரியவில்லையா?

எனவே உலக தரத்தில் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஓமந்தூரார் ராமசாமி அவர்கள் பெயரில் அமைக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகம் இருக்கும் போது நிதி சுமையை கருத்தில் கொண்டு அதனை பயன்படுத்த முன் வர வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இந்த நேரத்தில் முன் வைக்க விரும்புகிறேன்.

நான் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் இந்த புதிய தலைமைச் செயலகத்தில் அதற்கான தரமான வடிவமைப்புகளை கொண்டு தகுந்த வசதிகளுடன் எனது துறைசார்ந்த அலுவல் பணிகளை மேற்க் கொண்டுள்ளேன் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கு தற்போது செயல் பட்டு வரும் மருத்துவமனையை கடந்த தி.மு.க. ஆட்சியில் கழக தலைவர் முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் உலகத் தரத்தில் கொண்டு வரப்பட்ட கிண்டி மருத்துவமனையோடு இணைக்கும் வகையில் இடமாற்ற இந்த அரசு ஆலோசிக்கலாம்.

குறிப்பாக கலைஞர் அவர்களால் உருவாக்கப் பட்ட இந்த தலைமை செயலக கட்டிடத்தை திறந்து வைத்த பெருமை தற்போது உங்கள் ஆட்சிக்கு ஆதரவு அளித்துள்ள காங்கிரஸ் கட்சி தலைவர்களான அப்போதைய பிரதமர் திரு.மன்மோகன்சிங் மற்றும் திருமதி.சோனியா காந்தி அவர்களையும் சாரும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

தி.மு.க.வை தீயசக்தி என்று விமர்சித்த நீங்கள், தற்போது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த தீயசக்தியாய் உருப்பெற்று வருவதையும் கவனத்தில் கொண்டு கடைகோடி மாவட்டத்தில் இருந்து ஒலிக்கும் மக்களின் குரலாக இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தி.மு.க.
இளைஞர் அணி



தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், அக்டோபர் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

வ. எண்	பெயர், முகவரி
1.	கா.ராமசாமி, த/பெ காமராஜ், 5/236, வடக்குத் தெரு, திருமலாபுரம், சிவநாடானூர், கீழப்பாவூர், தென்காசி – 627 808
2.	கு.மகேந்திரன், த/பெ குழந்தைவேலு, 1–65–ஏ, மண்டையூர், விராலிமலை, புதுக்கோட்டை – 622 515
3.	மு.அனு, த/பெ முத்தையா, 63/110, தண்டியல் சாவடி தெரு, திருநெல்வேலி – 627 006
4.	ஜெ.சதீஷ்குமார், த/பெ ஜெகன்நாதன், 178, மல்லகுண்டா, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் – 635 852
5.	ர.பிரவீன்குமார், த/பெ ரமேஷ், 49/பி, நாராயணபாளையம் தெரு, காஞ்சிபுரம் – 631 501
6.	சு.சத்யராஜ், த/பெ சுந்தர்ராஜ், 3/226, காசிநாதபுரம், பட்டாபிராமபுரம், திருவள்ளூர் – 631 209
7.	ர.சிவக்குமார், த/பெ ரங்கசாமி, 2/12, உடையார் வீதி, செட்டிபாளையம், அங்கேரிபாளையம், திருப்பூர் – 641 602
8.	த.பிரகல்யா, க/பெ தயாநிதி, 82, அம்பேத்கர் தெரு, காமக்காபாளையம், தலைவாசல், சேலம் – 636 112
9.	ர.பிரியதர்ஷினி, த/பெ ரவீந்திரன், 5/35, ஜெகஜீவன்ராம் தெரு, ஆனந்தபுரம், தாம்பரம், சென்னை – 600 059
10.	மு.முத்தையன், த/பெ முருகேசன், 2/151–11, ஜெயஸ்ரீ நகர், வெங்கடாசலபுரம், துறையூர், திருச்சி – 621 011
11.	வி.மோனிகா, த/பெ வினோத், 32–பி, பிள்ளையார் கோயில் தெரு, மாதவரம், பொன்னேரி, திருவள்ளூர் – 601 204
12.	தி.சக்திவேல், த/பெ தியாகராஜன், 2/57, மேலத் தெரு, வேலங்குடி, கீழப்படுகை, திருவாரூர் – 610 109
13.	பி.மகேஷ், த/பெ பிரகாஷ், 1/7–19, முனுசாமி காட்டுவளவு, குஞ்சாண்டியூர், கோனூர், மேட்டூர், சேலம் – 636 404
14.	மு.ஹரிஷ், த/பெ முருகேசன், 14, மில் சாலை, சாமிநாதபுரம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476
15.	செ.தயாஸ்ரீ, த/பெ செல்லதுரை, 28/யூ, பாலன் நகர், 2–வது தெரு, பொம்மையகவுண்டன்பட்டி, தேனி – 625 531
16.	ரா.கிருத்திகா, த/பெ ராஜவேலு, 14/142, மாரனூர், வெள்ளரிவெள்ளி, எடப்பாடி, சேலம் – 637 101
17.	ர.மகேஷ், த/பெ ரத்தினவேல், 44, பாண்டியன் தெரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028
18.	ப.சஞ்சய், த/பெ பழனிசாமி, 2, ராமசாமி கோயில் வீதி, பனப்பாளையம், தாமரைப்பாளையம், ஊஞ்சலூர், ஈரோடு – 638 152
19.	அ.வேணுகோபால், த/பெ அர்ஜூனன், 4/76, வாஞ்சிநாதன் தெரு, சென்னீர்குப்பம், பூந்தமல்லி, திருவள்ளூர் – 600 056
20.	த.சிவனேஸ்வரன், த/பெ தங்கவேல், 308, காவேரி சாலை, மொளசி, திருச்செங்கோடு, நாமக்கல் – 637 210
21.	மு.குளத்தான், த/பெ முத்துமாலை, 6/99, வடக்குத் தெரு, காமராஜநல்லூர், ஏரல், சிறுத்தொண்டநல்லூர், தூத்துக்குடி – 628 802
22.	ச.பிரகதி, த/பெ சந்திரசேகர், 51, பாரதி நகர், எஸ்.ஐ.ஹெச்.எஸ். குடியிருப்பு, ஏரோட்ராம், கோயம்புத்தூர் – 641 014
23.	இ.மகேந்திரன், த/பெ இளங்கோவன், ரெட்டி மாங்குடி, இலால்குடி, திருச்சி – 621 105
24.	கு.அருண்பிரகாஷ், த/பெ குமார், 8/35–பி, உப்பிலிபாளையம், அருள்புரம், பல்லடம், திருப்பூர் – 641 605
25.	பி.தனலட்சுமி, க/பெ பிரபாகரன், 46, திருவீதி அம்மன் கோயில் தெரு, அமைந்தகரை, சென்னை – 600 029

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை - 18
நாள் : 01.10.2026

கலைஞர் 100 1924 - 2023